**மாதளை பிரதேச சபை**
**மாதளைமாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கானநிதிக்கூற்றுக்கள் 2017 மார்ச 31 திகதியும், முன்னையஆண்டிற்கானநிதிக்கூற்றுக்கள் 2016 மார்ச் 31 திகதியும் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம

இந்தஅறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ளவிடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்துமாதளைபிரதேசசபையின்2016 திசெம்பர் 31இல் உள்ளவாறான நிதிநிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்தஆண்டிற்கானஅதனதுநிதிசார்செயலாற்றலினையும் இலங்கைபொதுத்துறைகணக்கீட்டுநியமங்களுக்கு இணங்கஉண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றனஎன்பதுஎனதுஅபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதானகருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள்கணக்காய்வின் போதுஅவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டில் கட்டிடங்கள் நிர்மானிப்பதற்குசெலவிடப்பட்டிருந்தரூபா 4,006,852 மூலதனமாககணக்கிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ஆண்டின் முத்திரைக் கட்டணவருமானம் மற்றும் பெறவேண்டியமுத்திரைக் கட்டணவருமானம் ரூபா 11,839,090 ஆனதொகைகுறைத்துக்காட்டப்பட்டிருந்தது.

#### 1.3.2 பெறவேண்டியகணக்குகள்

மீளாய்வாண்டு இறுதியில் பெறவேண்டிய10 கணக்குமீதிகளின் பெறுமதிரூபா29,007,666 ஆனதுடன்,ஓராண்டுகாலத்தைவிஞ்சியரூபா6,511,426 ஆனமீதிஅதன் உள்ளடங்கப்பட்டிருந்தது.

#### 1.3.3 செலுத்தவேண்டியகணக்குகள்

மீளாய்வாண்டு இறுதியில் செலுத்தவேண்டிய14 கணக்குமீதிகளின் பெறுமதிரூபா16,085,453 ஆனதுடன்,ஓராண்டுகாலத்தைவிஞ்சிய ரூபா 8,381,693 ஆனமீதிஅதன் உள்ளடங்கப்பட்டிருந்தது.

#### 1.3.4 கணக்காய்விற்கானசான்றுகளின்மை

தேவையானதகவல்கள் கணக்காய்விற்குசமர்ப்பிக்கப்படாததன் காரணமாக4கணக்குவிடயங்களுக்கானகூட்டுத்தொகைரூபா84,821,311ஆனமீதிகள்கணக்காய்வின் போதுதிருப்தியுடன் ஆய்வுசெய்யமுடியாமல் இருந்தது.

### 1.3.5 சட்டங்கள்,விதிகள்மற்றும்பிரமாணங்களுடன் இணங்காமை

பின்வரும் சட்டங்கள்,விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போதுஅவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள்,விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|---|
| (அ) | 1988 பிரதேச சபை (நிதிமற்றும் நிருவாகம்) விதி | |
| | (i) விதி 217 | எல்லாகாணிமற்றும் கட்டிடங்கள் தொடர்பாகபீ.எஸ்.46 பிரகாரம் காணிமற்றும் கட்டிடங்கள் பதிவேடொன்றுநாளாதுவரையாகபராமரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| | (ii) விதி 218 | காணிமற்றும் கட்டிடங்கள் வருடத்திற்குஒருமுறைகணிப்பீடுமேற்கொள்ளப்படவேண்டியதுடன்,அதன் பிரகாரம் நடவடிக்கைஎடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | இலங்கைசனநாயகசோஷலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 571 | ரூபா 2,421,989ஆன 15 காலாவதியானவைப்புமீதிகளைதீர்ப்பதற்குநடவடிக்கைஎடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | சுற்றறிக்கைகள் மற்றும் ஏனையவைகள் | |
| | 2015 மார்ச் 10 ஆம் திகதிய இலக்கம் 03/2014(i) கொண்டதிறைசேரிசெயலாளரின் சுற்றறிக்கையின் vi காண்டம் மற்றும் மத்தியமாகாணஉள்ளுராட்சிஆணையாளரின் இலக்கம் 3/2/1/23 மற்றும் 2015 ஆகஸ்ட் 26 திகதியகடிதம் | பட்டியல் மீள் நிரப்பப்படாது,ரூபா 4,000 ஆனதொலைபேசிகொடுப்பனவுசபை செயலாளரின்சம்பளத்துடன்செலுத்தப்பட்டதனால் 2015 ஜுலைமுதல் 2016திசெம்பர் வரைரூபா36,000 ஆனபணம் கூடுதலாகசெலுத்தப்பட்டிருந்தது. |

## 2. நிதிமீளாய்வு

### 2.1 நிதிவிளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டநிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2016 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்தஆண்டுக்கானமீண்டுவரும் செலவுகளைவிஞ்சியவருமானம் ரூபா29,033,610ஆனதுடன்,அதற்குநேரொத்தமுன்னையஆண்டின் மீண்டுவரும் செலவுகளைவிஞ்சியவருமானம் ரூபா19,480,164ஆனது. முன்னையஆண்டுடன்ஒப்பிடுகையில்மீளாய்வாண்டின் நிதிவிளைவுகளில் ரூபா9,553,446ஆனவளர்ச்சியொன்றுகாணப்பட்டது.

### 2.2 பகுப்பாய்வுரீதியானநிதிமீளாய்வு

நிதிவிளைவுகளில் வளர்ச்சிக்கு4 வருமானவிடயங்களில் ரூபா11,710,254ஆனவருமானஅதிகரித்தல்மற்றும் 3 செலவினம்விடயங்களில்ரூபா2,408,897 ஆனசெலவுகுறைதலும்தாக்கம் விளைவித்திருந்தது.

**2.3 வருமானநிருவாகம்**

---

**2.3.1 வீதவரி**

---

மீளாய்வாண்டுதிசெம்பர் 31 இல் ரூபா641,992 ஆனநிலுவைமீதி இருந்ததுடன்,அதுதொடர்பாக 1988 பிரதேச சபை (நிதிமற்றும் நிருவாகம்) விதி33 பிரகாரம் நடவடிக்கைஎடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.3.2 ஏனைய வருமானம்**

---

(அ) ஏக்கர் வரி

---

மீளாய்வாண்டு இறுதியில் நிலுவைவீதவரிவருமானம் ரூபா 211,895 ஆனதுடன்,ஆண்டின் ஆரம்பநிலுவைஏக்கர் வரிவருமானம் ரூபா 227,025 இலிருந்துஆண்டினுள்ரூபா 22,421 அதாவது 10 சதவீதம் மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது.

(ஆ) நீர்க் கட்டணம்

---

மீளாய்வாண்டு இறுதியில் அறவிடவேண்டியமொத்தநிலுவைநீர்க் கட்டணவருமானமானரூபா 4,812,167 இலிருந்துரூபா 2,779,519 அல்லது 58 சதவீதம் ஒருவருடத்தைவிஞ்சிநிலுவையாகநிலவியதுடன், அந் நிலுவைக்குள் நீர் விநியோகசபையிடம் நீர் இணைப்புவழங்கப்பட்டிருந்த 248 நுகர்வோர்களிடமிருந்து 3 வருடத்திற்கும் மேற்பட்டகாலத்திலிருந்துஅறவிடப்படாமல் நிலவியரூபா 537,326 ஆனநிலுவைநிலவியது.

**2.3.3 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

---

2016திசெம்பர் 31 திகதிக்குநீதிமன்றதண்டப்பணமாகரூபா925,533மற்றும் முத்திரைக் கட்டணமாகரூபா16,191,986ஆனதொகைபெறவேண்டியதாக இருந்தது.

**2.4** மிகைஅறவிடல்

---

பிரதேச சபை அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின்பிரகாரம் விதிக்கப்பட்டமிகைகள் தொடர்பாக 2016 திசெம்பர் 31 இல்ரூபா 1,426,708 ஆனதொகைஅறவிடப்படவேண்டி இருந்தது.

**3 செயற்பாட்டுமீளாய்வு**

---

**3.1 முகாமைத்துவவினைத்திறமையின்மை**

---

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

**(அ)** சபையின்அங்கீகரிக்கப்பட்ட 11 பதவிகளில் 18 வெற்றிடங்களுக்கானஅலுவலர்களைசேர்ப்பதற்குநடவடிக்கைஎடுக்காமல் இருந்ததுடன்,வெற்றிடங்கள் இல்லாத 6 பதவிகளுக்காக 13 நபர்கள் மிகையாகசேவையில் ஈடுப்படுத்தப்பட்டிருந்தனர்.

**(ஆ)** முகாமைத்துவசேவைதிணைக்களத்தில் அங்கீகரிக்கப்படாத 8நீர் கட்டுப்பாட்டாளர்கள் சேர்க்கப்பட்டுமீளாய்வாண்டில் ஜனவரிமுதல் திசெம்பர் வரைரூபா 831,213 கொடுப்பனவொன்று சபை நிதியத்தால் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

**(இ)** ஏலவிற்பனைகாணிகளினால்சபைக்குசொந்தமாக்கப்பட்டிருந்தகாணிதுண்டுகளுக்கானநிலஅளவைதிட்டங்கள் இல்லாததுடன்,பரிசீலனைக்குஉள்ளானஅவ்வாறான 5 காணிதுண்டுகள் பொதுசெயற்பாடுகளுக்குபொருத்தமான இடங்களிலிருந்துபெற்றுக்கொண்டுவேலிஅடித்துபாதுகாப்பாக இருக்கவில்லை. 8 இடுகாடுகளின் உரிமையைஉறுதிப்படுத்தக்கூடியஒப்பினைகள் இருக்கவில்லை.

**(ஈ)** 2015 ஆண்டுபொருட்கள் மெய்மையாய்வின் பழுதுபார்த்துபாவினைக்குளடுக்கக்கூடியதாக இனங்காணப்பட்டிருந்தரூபா 295,631 பெறுமதியான 17 வகைகள் தொடர்பாகஉரியநடவடிக்கைஎடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(உ)** சபைக்குசொந்தமான இலக்கம் RA 8210 கொண்டடெக்டருக்காக 2016 ஆண்டினுள் ரூபா 135,172 ஆனபழுதுபார்ப்பதற்கானசெலவினம் மற்றும் ரூபா 11,555 ஆனபராமரிப்புசெலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்தபோதிலும் அந்தடெக்டரைஓட்டுவதற்கு இயலாதநிலைமையில் நிலவியது.

**(ஊ)** 2016 ஆண்டின் 19 சந்தர்ப்பங்களில் ரூபா 350,830 ஆனசெலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்த இலக்கம் RS– 1589 கொண்டபெகோ இயந்திரத்தின் பழுதுபார்பதற்கானசெயற்பாடுகள்முறையாகசெய்யப்படாமையினால் 2016 ஒக்டோபர் முதல் மீண்டும்விளைவற்றதாக இருந்ததனால், சபை வேலைகளுக்காகவெளித்தரப்பினரிடமிருந்துபெகோ இயந்திரம் வாடகைக்குபெற்றுக்கொள்வதற்குரூபா 840,000 செலுத்தப்பட்டிருந்தது.

### 3.2 செயற்பாட்டுவினைத்திறமையின்மை

மீளாய்வாண்டினுள் 231 கட்டிடவிண்ணப்பங்களுக்காகஅனுமதிபெற்றுக்கொடுத்திருந்தபோதிலும்,அவற்றில் 2 விண்ணப்பங்களுக்குமாத்திரம் இணக்கச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டிருந்தது.

### 3.3 பயனற்றஅல்லதுகுறைவாகப் பயன்படுத்தப்படும் சொத்துக்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2014 திசெம்பர் மாதத்தில் ஈ - ஷில்பாகாரகருத்திட்டத்தின் கீழ் மிஸ்ஸக தகவல் தொழில்நுட்பநிலையத்தைஉருவாக்குவதற்குதொலைதொடர்ப்புமற்றும்தகவல் தொழில்நுட்பஅமைச்சினால் சபைக்கு 40 கணனிகள், 40 கதிரைகள், 40 மேசைகள் மற்றும் பிரஜெக்டரொன்றுபெற்றுக்கொடுத்திருந்தபோதிலும், அந் நிலையம் 2016 திசெம்பர் 31 வரையும் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பிரதேசசபைக்குசொந்தமானகாணியொன்றில் 8 ஆண்டகளுக்குமுதலிருந்துசிறுஏற்றுமதிபயிர் மத்தியநிலையமொன்றுஉருவாக்கும்நோக்கத்தில் அரைவாசிநிர்மானிக்கப்பட்டிருந்தகட்டிடத்தின் வேலைகள் முடிக்கப்பட்டுபாவினைக்குளடுக்குவதற்குநடவடிக்கைஎடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.4 கருத்திட்டங்கள் தாமதித்தல்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2016 ஆண்டின் பிரதேச சபை வலுவூட்டத்தின் கீழ் அங்கீகரிக்கப்பட்டஒதுக்கீட்டுத் தொகைரூபா 2,915,000 ஆன 10 வேலைகள் மற்றும் சபை நிதியத்தைபயன்படுத்தி 2016 ஆண்டினுள் மேற்கொள்ளுவதற்குதிட்டமிடப்பட்டிருந்தஒதுக்கீட்டுத் தொகைரூபா 8,989,990 ஆன 17 வேலைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மாகாணகுறித்தஅபிவிருத்திஉதவின் கீழ் எல்லேபொல ஜனசுவயநீர் உத்தேசதிட்டத்திற்குநீர் பம்பியொன்றுகொள்வனவுசெய்வதற்குரூபா 275,000 ஆனஒதுக்கீடுஏற்பாடுசெய்யப்பட்டிருந்தபோதிலும் ஆண்டினுள் கருத்திட்டத்தைமேற்கொள்ளப்படாமைகாரணத்தால் அவ் ஒதுக்கீடுஇழக்கப்பட்டிருந்தது.

**3.5 கழிவுபொருள் முகாமைத்துவம்**

---

சபை அதிகாரப் பிரதேசத்தில் தினந்தோறும் சேர்க்கப்படும் குப்பை 2 மெற்றிக் டொன்களினால் இயற்கைபசளை 400 கிலோகிராம் அளவுஉற்பத்திச் செய்யப்படுவதுடன்,சேர்க்கப்படும் குப்பையிளிருந்துஅகற்றும் 40 சதவீதஅளவானபொலிதின்,எரிகருவியொன்றுபயன்படுத்திஎரிக்கப்படுகிறுது. இவ் எரிகருவிமற்றும் கழிவுபொருள் முகாமைஅலகின் நடவடிக்கைக்காகமத்தியசுற்றாடல் அதிகாரச் சபையினால் அனுமதிப்பத்திரமொன்றுபெற்றுக்கொண்டிருக்கவில்லை.

**4 கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

---

**4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு**

---

**(அ)** 5 வருமானவிடயங்களில்மதிப்பிடப்பட்டவருமானம் மற்றும் உள்ளவாறானவருமானங்களின் இடையில் 34சதவீதம் முதல் 92சதவீதம் இடையில் வீச்சளவானவிலகல்கள் நிலவியதுடன்,8செலவினவிடயங்கள் தொடர்பாகதேறியஒதுக்கீடுமற்றும் உள்ளவாறானசெலவுகளுக்கு இடையில் 33சதவீதம் முதல்86சதவீதம் வரைவீச்சளவானவிலகல்கள் நிலவியது.

**(ஆ)** 5 வருமானவிடயங்களுக்காகரூபா3,230,000 ஆனமதிப்பிடப்பட்டஎவ்விதவருமானமும் ஈட்டப்பட்டிருக்கவில்லை.

**(இ)** மீளாய்வாண்டினுல் வருமானம் மற்றும் செலவினவிடயங்கள் இடையில்,ஒதுக்கீடுமாற்றப்பட்டபின்னரும்,பாதிடப்பட்டமற்றும் உள்ளவாறானவருமானம் மற்றும் செலவுகளுக்கு இடையில் கனிசமானவிலகல்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடுஆக்கபூர்வமானமுகாமைத்துவக் கட்டுப்பாட்டுச் சாதனமொன்றாகபயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

---

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாகசபையின் விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) பதவியணியினர்முகாமைத்துவம்.
(ஆ) சொத்துக்கள் கட்டுப்பாடு.
(இ) வாகனகட்டுப்பாடு.
(ஈ) பாதீடுகட்டுப்பாடு.
(உ) கலஞ்சியக் கட்டுப்பாடு.